**செய்தி வெளியீடு எண்:764 நாள் – 17.9.2008**

**கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்**

தெலுங்கு கங்கை திட்டத்தின் கீழ் கண்டலேறு நீர்த்தேக்கத்தினை பூண்டி நீர்த்தேக்கத்துடன் இணைக்கும் கால்வாய் கண்டலேறு – பூண்டி கால்வாய் என அழைக்கப்படுகிறது. இக்கால்வாய் ஆந்திரமாநிலத்தில் 152.70 கி.மீ நீளமும், தமிழ்நாட்டில் 25.27 கி.மீ. நீளமும் உள்ளது. இக்கால்வாயின் கட்டுமானப் பணிகள் யாவும் 1996 இல் முடிவடைந்து, அதுமுதல் பூண்டி நீர்த்தேக்கத்திற்கு இத்திட்டத்தின் மூலம் தண்ணீர் பெறப்படுகிறது.

கிருஷ்ணா நதிநீர் பங்கீடு ஒப்பந்தத்தின்படி, ஆந்திர அரசு தமிழகத்திற்கு ஜுலை முதல் அக்டோபர் வரையிலான ஒப்பந்தத்தின் முதலாவது காலகட்டத்தில் 8 டி.எம்.சி மற்றும் ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான இரண்டாவது கால கட்டத்தில் 4 டி.எம்.சி தண்ணீர் வழங்கப்பட வேண்டும்.

ஒப்பந்தத்தின் திட்டம் தொடங்கிய 1996–லிருந்து பிப்ரவரி 2007 வரை மொத்தம் 27.58 டி.எம்.சி தண்ணீரை ஆந்திர அரசு வழங்கியுள்ளது. கடந்த ஆண்டில் ஒப்பந்தத்தின் முதல் காலகட்டத்தில், 03.08.2007 முதல் 06.11.2007 வரை 4.60 டி.எம்.சி தண்ணீர் ஆந்திர அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது காலகட்டமான ஜனவரி 2008 முதல் ஏப்ரல் 2008 முடிய உள்ள காலத்திற்கு சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் போதிய அளவு நீர் கையிருப்பு இருந்ததால் தண்ணீர் பெறப்படவில்லை. இதுவரை 32.18 டி.எம்.சி. தண்ணீர் பெறப்பட்டுள்ளது.

கண்டலேறு – பூண்டி கால்வாயில் 13.50 கி.மீ. முதல் 21.50 கி.மீ. வரை கோண்டுவானா களிமண் தன்மையாலும், இரு கரைகளிலும் அதிகப்படி மண் மேடுறுத்தப்பட்டதாலும், கால்வாயின் பக்க சரிவுகளில் அடிக்கடி மண் சரிவு ஏற்பட்டு, சீரான நீர்வரத்து பாதிப்படைந்தது. இதுபற்றி விபரம் அறிந்த ஸ்ரீ சத்ய சாய்பாபா அறக்கட்டளை, தமிழக அரசின் வேண்டு கோளுக்கிணங்க, ஆந்திர எல்லையில் இக்கால்வாயை சீரமைத்தது போல, தமிழ்நாடு எல்லையில் பாதிப்படைந்த கண்டலேறு – பூண்டி கால்வாய், இணைப்பு கால்வாய் மற்றும் ஊட்டுக் கால்வாய் பகுதிகளை சீரமைக்க முன்வந்து, 14.05.2007 அன்று பணிகள் துவங்கப்பட்டன.

கண்டலேறு – பூண்டி கால்வாயில் மண் சரிவு ஏற்பட்டு மிகவும் பாதிப்படைந்த பகுதிகளான 0 மீ. முதல் 700 மீ முடிய மற்றும் 13500 மீ முதல் 21500 மீ முடிய உள்ள பகுதிகளில் கால்வாயில் இருபக்க கரைகளும் சீரமைக்கப்பட்டுள்ளன. இதே பகுதிகளில் கால்வாயின் முழு நீர் மட்டத்திற்கு கீழ் மண் சரிவினால் கட்டுமானம் பாதிப்படைந்த பகுதிகளில் 2324 மீ நீளத்திற்கு பக்கச் சுவர்கள் அமைக்கவும் 3500 மீ நீளத்திற்கு லைனிங் செய்யவும் திட்டமிடப்பட்டு பணிகள்யாவும் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 700 மீ முதல் 13500 மீ முடிய உள்ள பகுதியில் சிறு பழுதுபார்ப்புப் பணிகள் 2000 மீ நீளத்திற்கு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 21500 மீ முதல் 25275 மீ முடிய உள்ள பகுதியில் 30.09.2008க்குள் முடிக்க திட்டமிடப்பட்டு பழுதுபார்ப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

சீரமைக்கப்பட்ட கரைகளில் கால்வாயின் முழு நீர் மட்டத்திற்கு மேல் கரை சரிவு பாதுகாப்பு பணியின் திட்ட இலக்கான 17400 மீ நீளத்தில் 15550 மீ நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய கரை சருக்குச்சுவர் அமைக்கும் பணி 30.09.2008க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவை தவிர ஊட்டுக் கால்வாயில் 4 இடங்களில் பழுதுபார்ப்புப் பணிகள் எடுத்துக் கொள்ள திட்டமிடப்பட்டதில் 2 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இணைப்புக் கால்வாயில் 3 இடங்களில் பழுதுபார்க்க திட்டமிடப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இத்துடன் ஸ்ரீ சத்யசாய் அறக்கட்டளை போரூர் ஏரி மற்றும் மாதவரம் ரெட்டை ஏரிகளை புனரமைக்கும் பணிகளையும் செயல்படுத்த இசைந்துள்ளது.

*****



வெளியீடு: இயக்குநர் –செய்தி மக்கள் தொடர்புத்துறை .சென்னை –09

# K P Canal Repair Work - Progress Report as on 15.09.08



| Right Bank Revetment Completed | Right Bank Revetment Progress | Right Bank Retaining wall Completed | Right Bank Retaining wall Progress | 0 Point | Left Bank Retaining wall Progress | Left Bank Retaining wall Completed | Left Bank Revetment Progress | Left Bank Revetment Completed |
|---|---|---|---|---|---|---|---|---|
| 500 m | | | | | | | | 500 m |
| 200 m | | | | | | | | 200 m |
| | | | | 13500 | | | | |
| | 200 m | 160 m | | | | | | |
| | | | | | | | | 720 m |
| 520 m | | | | | | | | |
| | | | | DL14220 | | | | |
| | | 59 m | | | | | | |
| | | | | 14500 | | | | |
| | | 55 m | | | | 25 m | | |
| | 1000 m | | | | | | | 400 m |
| | | 45 m | | | | 185 m | | |
| | | 50 m | | | | | 350 m | |
| | | | | | | 40 m | | |
| | | 20 m | | | | | | 40 m |
| | | | | | | 150 m | 20 m | |
| | | | | | | | | 400 m |
| | | 90 m | | 15500 | | | | |
| | | | | | | 30 m | 200 m | |
| | 1000 m | | | | | | | 200 m |
| | | | 60 m | | | | | |
| | | 40 m | | | | 102 m | | |
| | | | | | | | 500 m | |
| | | 40 m | | | | 30 m | | |
| | | | | 16500 | | | | |
| | | 30 m | | | | | | |
| | | | 75 m | | | | | |
| | | | | | | 40 m | | |
| | | | 25 m | | | | | |
| 960 m | | 60 m | | | | 30 m | | 960 m |
| | | 45 m | | | | 90 m | | |
| | | | | | | 40 m | | |
| | | | | 17500 | | 66 m | | |
| | | | | DL17638 | | | | |
| | | 30 m | | | 50 m | | | |
| 750 m | | | | | | | | |
| | | | | | | 182 m | | |
| | 50 m | 30 m | | | | 70 m | | 1500 m |
| | | | | 18500 | | | | |
| | | | | | | 25 m | | |
| | | 40 m | | | | | | |
| | | | | | | 25 m | | |
| 700 m | | | | | | | | |
| | 100 m | | | | | 40 m | | |
| | | | | | | | 200 m | |
| | | | | 19500 | | | | |
| 1420 m | | | | | | | | 1060 m |
| | | | | | | 100 m | | |
| | 150 m | 50 m | | | | | 150 m | |
| 300 m | | | | 20500 | | | | 300 m |
| | | | | | | | 700 | |
| | | | | 21500 | | | | |
| **5350 m** | **2500 m** | **844 m** | **160 m** | | **50 m** | **1270 m** | **1420 m** | **6280 m** |
| | **7850 m** | | **1004 m** | | | **1320 m** | | **7700 m** |

Earth Work Easening in Progress
Retaining Wall Completed
Retaining wall in progress
Revetment work Completed
Revetment work in Progress

## K P Canal - Repairs being carried out by Sri Sathya Sai Trust

Progress Report as on 15.09.08

| Sl. No. | Description of Work | Work in progress | Length covered |
|---|---|---|---|
| 1 | Earthwork excavation for Easening of canal bank slopes | Left Bank - 0m - 800m | 800 |
| | | Right Bank - 0m - 800m | 800 |
| | | Left Bank - 13500m - 21500m | 8000 |
| | | Right Bank - 13500m - 21500m | 7800 |
| | | | 17400 m |
| 2 | Retaining Wall Concreting. | Right Bank - @ 13550, 14560, 15200, 15500,16450,16750,17030,17150, 17660,18450&20150. | 844 |
| | | Left Bank - @ 14850, 15200, 15350,15500,16250, 16400,16850, 17150,17340, 17500, 17950, 18200,18350, 18530, 18570m,19220,20150 & 20250 | 1270 |
| | Retaining Wall Concreting Completed | | 2114 m |
| | Retaining Wall Concreting Progress | | 210 m |
| 3 | Revetment | Right bank - @ 0-700, 13500-20800 | 7850 |
| | | Left bank - @ 0-700, 13500-14220, 15350-20800 | 7700 |
| | Revetment Completed | | 15550 m |
| | Revetment Progress | | 1850 m |



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9

# COMPONENTS OF TELUGU GANGA PROJECT FOR KRISHNA WATER SUPPLY PROJECT TO CHENNAI

